**செ.வெ.எண்: 55** **நாள்: 25.10.2021**

**பத்திரிக்கை செய்தி**

அரசாணை எண்:644, வருவாய் மற்றும் பேரிடர் துறை, நாள்:11.10.2021-ன் படி **"விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் பட்டா தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் கிராம அளவில் சிறப்பு முகாம்கள் நடத்துதல்"** தொடர்பாக 2014 முதல் 2016 வரை தமிழ்நிலம் மென்பொருளில் கிராம கணக்குகள் பதிவேற்றம் செய்த போது ஏற்பட்ட கீழ்க்கண்ட பட்டா பிழை திருத்தங்கள் (கணினி பிழைகள் மட்டுமே) செய்திட கிராமம் தோறும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

1. உட்பிரிவு எண்--புல எண் தவறாக இருந்தால்
2. பரப்பு திருத்தம்
3. பட்டாதாரர் பெயர் (அ) தந்தை -- பாதுகாவலர் பெயர் திருத்தம்
4. உறவுமுறை திருத்தம்
5. பட்டாவில் உள்ள கலங்கள் காலியாக குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள்
6. பரப்பு--பட்டாதாரர் பெயர் அருகிலுள்ள பரப்பு--பட்டாதாரர் பெயர் மாறி இருப்பது (Interchanged).

எதிர்வரும் வாரத்தில் **27.10.2021** அன்று நாகப்பட்டினம் வட்டத்தில் **நாகூர் கிராமம், தெத்தி, நாகப்பட்டினம் கிராமம், பாலையூர், வடகுடி** ஆகிய கிராமங்களிலும், கீழ்வேளூர் வட்டத்தில் **ஆனைமங்கலம், தேவூர்,** ஆகிய கிராமங்களிலும், வேதாரண்யம் வட்டத்தில் **தோப்புத்துறை, நெய்விளக்கு, மகாராஜபுரம் கீழ்பாதி, வேதாரண்யம் பாகம்-2** ஆகிய கிராமங்களிலும, திருக்குவளை வட்டத்தில் **ஆதமங்கலம்** கிராமத்திலும் நடைபெற உள்ளது.

மேலும் **29.10.2021** அன்று நாகப்பட்டினம் வட்டத்தில் **பெருங்கடம்பனூர், இளங்கடம்பனூர், தேமங்கலம், சிராங்குடிபுலியூர், சங்கமங்கலம்** ஆகிய கிராமங்களிலும், கீழவேளூர் வட்டத்தில் **சோழவித்தியாபுரம், கீழையூர்** ஆகிய கிராமங்களிலும், வேதாரண்யம் வட்டத்தில் **கோவில்பத்து, வெள்ளப்பள்ளம்** ஆகிய கிராமங்களிலும், திருக்குவளை வட்டத்தில் **மடப்புரம்** கிராமத்திலும் நடைபெற உள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிராம பொது மக்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**